எட்டாம் வகுப்பு -கணக்கு-புள்ளியியல்-ஒரு மதிப்பெண் தேர்வு

ஆக்கம்: கோ.இளவரசு M.A.,M.Sc.,M.Phil.,B.Ed., B.T.Asst.,

1. தரவு என்பது ________இன் தொகுப்பு
(அ) எண்கள் (ஆ) எழுத்துகள் (இ) அளவுகள் (ஈ) இவை அனைத்தும்

2. கொடுக்கப்பட்டத் தரவுகளில் ஒரு மதிப்பு எத்தனை முறை வருகிறது எனக் கூறுவது அம்மதிப்பின் ________
(அ) நேர்க் கோட்டுக் குறிகள் (ஆ) தரவு (இ) நிகழ்வெண் (ஈ) ஏதுமில்லை

3. கொடுக்கப்பட்ட விவரங்களில் மிகப் பெரிய மற்றும் மிகச்சிறிய அளவுகளின் வித்தியாசம் _______
(அ) வீச்சு (ஆ) நிகழ்வெண் (இ) மாறி (ஈ) ஏதுமில்லை

4. கொடுக்கப்பட்டத் தரவுகளை ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் எடுத்துக்கொள்வது _________
(அ) தொகுக்கப்படாத (ஆ) தொகுக்கப்பட்டது
(இ) நிகழ்வெண் (ஈ) ஏதுமில்லை

5. உள்ளடக்கியத் தொடர் ஒரு _________ தொடர்
(அ) தொடர்ச்சியான (ஆ) தொடர்ச்சியற்ற (இ) இரண்டும் (ஈ) ஏதுமில்லை

6. பிரிவு இடைவெளிகளில், ஒரு பிரிவு இடைவெளியின் மேல் எல்லையானது அடுத்தப் பிரிவு இடைவெளியின் கீழ் எல்லையாக இருந்தால் அது _________ தொடர்.
(அ) உள்ளடக்கிய (ஆ) விலக்கிய (இ) தொகுக்கப்படாத (ஈ) ஏதுமில்லை

7. தொகுக்கப்படாத விவரங்களின் வரைபட விளக்கமுறை _________
(அ) நிகழ்வுச் செவ்வகம் (ஆ) நிகழ்வுப் பலகோணம்
(இ) வட்ட விளக்கப்படம் (ஈ) இவை அனைத்தும்

8. நிகழ்வுச் செவ்வகம் என்பது ஒரு _________ நிகழ்வெண் பரவல்
(அ) தொடர்ச்சியான (ஆ) தொடர்ச்சியற்ற (இ) தனித்த (ஈ) ஏதுமில்லை

9. _________ என்பது வரைபட முறையில் தொடர்ச்சியான நிகழ்வெண் பரவலுக்கான நேர்கோட்டு வரைபடம் ஆகும்.
(அ) நிகழ்வுப் பலகோணம் (ஆ) நிகழ்வுச் செவ்வகம்
(இ) வட்ட விளக்கப்படம் (ஈ) பட்டை விளக்கப்படம்

10. தொகுக்கப்பட்ட விவரங்களுக்கான வரைபட விளக்கப்படம் _________
(அ) பட்டை விளக்கப்படம் (ஆ) பட விளக்க முறை
(இ) வட்ட விளக்கப் படம் (ஈ) நிகழ்வுச் செவ்வகம்

LIVEWORKSHEETS